©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 52] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 23, 2020
மார்கழி 8, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண்.182, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 11 நவம்பர் 2020]*

தரவு பதிவு செயற்பாடுகளில் வேலைவாய்ப்பு தொடர்பாக (அரசு அல்லாத), 1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) கீழ், குறைந்தளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என தமிழ்நாட்டு ஆளுநர் கருதுவதால்,

**2.** எனவே தற்போது மேற்சொன்ன சட்டத்தின் 27ஆம் பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன பிரிவில் கோரப்பட்டவாறாக, மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணையின் பகுதி I—ல் மேற்சொன்ன வேலைவாய்ப்பினைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்திற்கான அறிவிப்பை இதனால் தெரிவிக்கிறார்.

**3.** இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு முன்னர், உத்தேசிக்கப்பட்ட சேர்த்தல் தொடர்பாக, வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை, தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படும், மறுப்புரை அல்லது கருத்துரை, ஏதேனுமிருப்பின், அதனை சென்னை – 600 006, தேனாம்பேட்டை என்ற முகவரியிலுள்ள தொழிலாளர் ஆணையர் வாயிலாக, சென்னை – 600 009, தலைமைச் செயலகம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**இ. சுபாமதி,**
*இயக்குநர் (மு.கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP-II-2-(52) (T Sup)—1